# மலையகச் சிறுவர்கள் கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் - மலையகக் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

திருமதி ஸாதியா, எம்.ஏ.எஸ்.எப்.

மலையகச் சிறுவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக, வறுமை காரணமாக ஏனைய சிறுவர்களைப் போல் வாழ்வதற்கு வாய்ப்பின்மை, பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் சரிவரக் கிடைக்காமை, பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படல், வேலைக்கு அமர்த்தப்படல், கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முதலியவற்றைக் கூறலாம். அவற்றுள் மலையகச் சிறுவர்கள் கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களது எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்குவதாய் அமைந்திருப்பதை அவதானிக்க முடியும். மலையகக் கல்வியின் ஆரம்ப நிலைகள் தொடர்பாக சோ. சந்திரசேகரன் பின்வருமாறு கூறியுள்ளார்;

“19ஆம் நூற்றாண்டில் மலையக மக்களின் கல்வித் தேவைகள் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டிருந்தன. கல்வித் தேவைகள் குறித்து நியமிக்கப்பட்ட சகல ஆணைக்குழுக்களுமே தோட்டப்புற மக்களின் தேவைகள் குறித்து முற்றாக மௌனம் சாதித்தன……ஒரு உண்மையான விடுதலையின் அடிப்படை அம்சமாகக் கணிக்கப்பட வேண்டிய கல்வி, தோட்டத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு அபத்தமான அம்சமாகவே கணிக்கப்பட்டது. சிலர் மேலும் ஒருபடி சென்று கல்வியானது தொழிலாளர்களின் தொழில் திறமைகளை முடமாக்கிவிடக் கூடும் என்று கருதினர்.”[1]

இவ்வாறான ஒரு பின்னணியிலேயே மலையக மக்களின் கல்வி ஆரம்பமாகி, பாடசாலைகள் படிப்படியாக உருவாக்கப்பட்டு, 1988ஆம் ஆண்டில் அரசு இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்றது. எனினும் இன்றுவரை, பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.[2] மலையகச் சிறுவர்கள் கல்வியில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாக, கற்றலுக்கு ஏற்றமுறையில் வீட்டுச் சூழல் இன்மை, பாடசாலைகளில் நிலவும் பௌதீக, மனித வளப்பற்றாக்குறை, மாணவர்களின் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளாது ஆசிரியர்கள் செயற்படலும் தியாக மனப்பான்மையின்மையும், நீண்ட காலமாக தோட்ட நிர்வாகத்தினரின் கீழ் இப்பாடசாலைகள் இயங்கி வந்ததால் அவர்கள் விதித்த கட்டுப்பாடுகள் முதலியவற்றைக் கூறலாம்.

**கற்றலுக்கு ஏற்ற முறையில் வீட்டுச் சூழல் இன்மை**

இதனைக் கற்றலுக்கு வீட்டுச் சூழல் இடங்கொடுக்காமை எனவும் கூறலாம். வறுமை, பெற்றோரின் அறிவீனமும் அக்கறையின்மையும், சரியான குடும்பத்திட்டமிடல் இன்மையால் ஏற்படும் வேலைப்பழு, சுற்றுச் சூழலில் காணப்படும் இடையூறுகள், தந்தைமாரின் போதைவஸ்த்துப் பாவனை முதலிய காரணங்களால் மலையகச் சிறுவர்களுக்கான கற்றலுக்கான வீட்டுச் சூழல் இல்லாமல் போய்விடுகின்றது.

கற்றலைச் செவ்வனே செய்வதற்கு வீட்டுச் சூழல் மிகவும் இன்றியமையாதது. அதில் குறிப்பாகப் பெற்றோரின் தூண்டல் அல்லது ஊக்கல், அக்கறை என்பன மிகவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. கற்றலுக்கான வீட்டுச் சூழலை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கும் பாரிய பொறுப்பும், கடமையும் பெற்றோரையே சாரும். ஆனால் மலையகப் பெற்றோர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் வறியவர்களாகவும் காணப்படுவதால் அவர்களில் அதிகமானோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதேவேளை, தமது தகுதிக்கு அப்பாற்பட்ட முறையில் கல்விக்கான செலவுகள் அமையும் போதும், கல்வியின் பயனை உணராத நிலையிலும் பெற்றோரால் தமது பிள்ளைகளைக் கல்வியின்பால் செலுத்துவதற்கு முடியாத நிலையே காணப்படுகின்றது. அதனால் பெற்றோரின் ஊக்கப்படுத்தல் இன்றி அம்மாணவர்களும் கல்வியில் பின்தங்குகின்ற நிலை காணப்படுகின்றது. அத்தோடு இம்மலையகச் சிறுவர்கள் ஒழுங்கான முறையில் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. பாடசாலை நேரங்களில் தமது பெற்றோர் வேலைக்குச் சென்றதும், தாமும் அங்குமிங்கும் அலைந்து திரியும் நிலை பரவலாகக் காணப்படுகின்றது. மாலை வேளைகளில் தாய்மார், வீடு வரும்வரை தமது சகாக்களுடன் சேர்ந்து கும்மாளமடித்துத் திரிவர். இவர்களது எதிர்காலம் பாழாவதை அப்பெற்றோரும் உணர முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இதனை உறுதிப்படுத்துவதாகவே சி.வி. வேலுப்பிள்ளையின் ‘தேயிலைத் தோட்டத்திலே’ எனும் கவிதை பின்வருமாறு அமைந்துள்ளது;

"............ தாயும் வீடு
அடையும் வரையில்
தாமும் பள்ளியில்
படிக்க ஏகாமல்

நேயர் குழத்
தேயிலைச் செடிக்குள்
நித்தம் ஒளிந்து
நிற்பர் – அல்லது –

தோட்டம் சுற்றித்
திரிவர் – அல்லது

திரண்ட காந்திச்
சோலையை அடைந்து

கூட்டம் போட்டுக்
கும்மாள மடிப்பர்
கூடி விறகும்
பொறுக்கிடப் போவர்

எழுத்தறி வில்லா
இத்தகைய வளர்ச்சியால்
இவர் எதிர்காலம்
கனவென ஆயினும் ......."

(வேலுப்பிள்ளை, சி.வி, (1969), தேயிலைத் தோட்டத்திலே, பக். 46 – 47)

அதேவேளை, மலையகச் சிறுவர் கல்வி பெறுவது தமக்கு ஆபத்து எனக்கருதிய தோட்ட நிருவாகம் எண்ணும் எழுத்தும் மாத்திரம் கற்கக் கூடியவகையில் ஆண்டு ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளையே உருவாக்கினர். அதில் கற்பித்த ஆசிரியர்களும் இச்சிறுவர்களை தமது சொந்த வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தினர். இச்சிறுவர்களுக்கு அவர்களின் பெயர்களை எழுதுவதற்குப் பழக்கினால் போதுமானது என்ற நிலையே ஆரம்பத்தில் நிலவியது. அதற்கு மேல் கல்வி வழங்கப்படக் கூடாது என தோட்ட நிருவாகம் நினைத்தது. அதனால் ஐம்பது வீதமானோர் ஐந்தாம் ஆண்டு வரை கற்றனர். மேல்வகுப்புகள் இல்லாததால் அந்த ஐம்பது வீதத்தில் பத்து வீதமானோரே நகர்ப்புறப் பாடசாலைக்குச் செல்கின்றனர்.[3]

இவ்வாறான பள்ளிக்கூடம் நமக்கு அவசியமில்லை எனக்கருதிய பெற்றோரும் தமது பிள்ளைகளைப் படிக்க விடாது பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தினர். இவ்வாறான நிலைமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதாகவே நாவண்ணனின் 'கல்வி' எனும் கவிதை அமைந்துள்ளது.

'ஏதுக்கடா நமக்கிந்த பள்ளி?- சென்று
எடுத்துவா மலையிலே
எரித்திடக் கொள்ளி
இதுக்கெல்லாம் நமக்கென்ன தேவை? – யாரும்
எஜமானன் வீட்டுக்கு
ஏகிச்செய் சேவை'

(நாவண்ணன் (1992), கதை கண்ணீர் கவிதை, ப. 27)

இக்கவிதையில், கல்வியின் மீதான பெற்றேரின் அசமந்தப் போக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பெற்றோரின் அறியாமை காரணமாகவும் குடும்பத் திட்டமிடல் இன்மையாலும் மலையகச் சிறுவர்கள் மீது பல்வேறு வகையிலும் அளவுக்கதிகமான வேலைப்பழு சுமத்தப்படுகின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் அதிகமான பிள்ளைகள் காணப்படுவதால் தமது உழைப்பில் அவர்களை ஒழுங்காகப் பராமரிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. கல்விச் செலவுகளைச் செய்வதற்கும் சிரமப்படுகின்றனர். அதேவேளை இச்சிறுவர்கள் பாடசாலை விட்டு வந்ததும் தமது தம்பி தங்கைகளைப் பராமரிக்க வேண்டியவர்களாகவும், வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். இவர்களில் அதிகமானோர் பாடசாலைக்குத் தொடர்ந்து செல்வதில்லை. இடைவிட்டுச் செல்பவர்களாகவும் இடை விலகுவோர்களாகவும் உள்ளனர்.

விட்டு விட்டுப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் கற்றலில் மிகவும் பின்னடைந்தவர்களாகவே உள்ளனர். காரணம், அவர்களுக்குப் பாடங்களுக்கு இடையேயான தொடர்புகள் இன்மையால், அடுத்தடுத்த பாடங்களைத் தொடர்வதில் அதிகம் இடர்படுகின்றனர். இவ்வாறு பாடசாலைக்கு ஒழுங்காக வராத மாணவர்களிடம் இது பற்றி வினவிய போது அதற்கு மூலகாரணம் தமது பெற்றோர் என்பதை அறிய முடிந்தது. பெற்றோர், இச்சிறுவர்களை அவர்களது தம்பி, தங்கைகளைப் பார்த்துக் கொள்வதற்காகப் பாடசாலைக்குப் போக வேண்டாம் எனக் கூறுகின்றனர். அத்தோடு தம்பி, தங்கைகளுக்குச் சுகயீனம் என்றாலும் தாய் விடுமுறை எடுக்க முடியாத நிலையில் இச்சிறுவர்களையே அவர்களைப் பராமரிப்பதற்கு விடுகின்றனர். அதனால் இவர்களது எதிர்காலம் பாழாவதை அலட்டிக் கொள்ளாதவர்களாகவும் அக்கறை காட்ட முடியாதவர்களாகவும் இப்பெற்றோர் காணப்படுகின்றனர் என்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயம். இவ்வாறான ஒரு நிலை அதிகளவில் இச்சிறுவர்களின் கல்வியில் பாதிப்பை

ஏற்படுத்தினாலும் இது பற்றிப் பேசுவதற்கு மலையகக் கவிதைகள் தவறி விட்டன என்றே கூற வேண்டும்.

ஆனால், பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்ததும் தம்பி தங்கைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இச்சிறுவர்களுக்குரியது என்பதைப் பல கவிதைகள் சித்திரித்துக் காட்டுகின்றன. அதேவேளை, பெற்றோரின் வறுமை காரணமாகப் பிள்ளைகளைப் பாடசாலையை விட்டு இடைநிறுத்தி வீடுகள், கடைகள், ஹோட்டல்கள் முதலியவற்றில் வேலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றனர். இதனால் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகுவோர் வீதம் அதிகரித்தே வந்துள்ளது.

அது மட்டுமன்றி, பெற்றோர் அதிலும் தந்தைமாரின் போதைவஸ்த்துப் பழக்கத்தால் குடும்பத்தில் வறுமைநிலை மேலும் மேலும் அதிகரிக்கின்றது. அதேவேளை பெற்றோர் போதைவஸ்த்துப் பாவிக்கும்போது அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வி பற்றிச் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். அவர்கள் சுய சிந்தனையோடு வாழும் போதுதான் தமது பிள்ளையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க முடியும். சுயமிழந்த பெற்றோர்களின் கொடுமைகளால் இச்சிறுவர்கள் கல்வியை விட்டு விலகும் நிலை ஏற்படுகின்றது. இப்பெற்றோர் பிள்ளைகளை அடித்துக் கொடுமைப்படுத்தும் போது, அவர்கள் எதையும் முன்னின்று செய்யத் தயங்குபவர்களாகக் காணப்படுகின்றனர். அதேவேளை வீட்டில் சண்டை சச்சரவுகள் தொடர்ந்தும் ஏற்படும்போது குழந்தைகள் மனவிரக்தி அடைகின்றனர். அதனால் தாமாகவே கல்வியில் பின்னடைகின்றனர். இதனை விளக்குவதாக 'தவிர்த்து விடுங்கள்' எனும் கவிதை அமைந்துள்ளது.

அத்தோடு, இச்சிறுவர்கள் பாடசாலை செல்லத் தேவையான உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள் முதலியவற்றைப் பெற்றோரிடம் கேட்கும்போது பெற்றோர் தமக்கு வசதியில்லாத நிலையில் இவற்றைச் செய்ய மறுக்கின்றனர். அதனால் இச்சிறுவாகள் பாடசாலையின் எதிரிகளாகக் கல்வியை விட்டு தாமாகவே தூரப்படுகின்றனர். இவ்வாறான நிலையினை குறிஞ்சி இளந்தென்றலின் 'திரும்பிப் பார்க்கிறேன்', றசீனா புகாரின் 'மலையகத்து சுப்பன்' முதலிய கவிதைகளில் காணலாம்.

"………. குடிகார அப்பன் அவன்
கொடும் பாவி தான் என்பேன்
படிக்கக் கேட்கும் பிள்ளையிடம்
பார்தொழுவ வேலை என்பான்.
குடித்தது என்றும் காட்டயத்தான்
எட்டாம் வகுப்பு படித்துவிட்டேன்
படித்ததுதான் போதுமென்று
இருக்கச் சொல்லி விட்டார் வீட்டில் …."

(றசீனா, (1993), மண்ணிழந்த வேர்கள், ப. 14)

எனக்கூறுவதன் மூலம் இதனை அறியலாம். இவ்வாறான நிலைமைகளால் பிள்ளைகள் தம் சகாக்களோடு சேர்ந்து கொழும்பு போன்ற பகுதிகளுக்கு வேலைகளுக்குச் சென்று விடுகின்றனர் என்பதும் இக்கவிதையின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் பல்வேறு விழாக்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை நடாத்துவதற்குப் பிள்ளைகளிடம் பணம் கொண்டுவரும்படி வற்புறுத்துகின்றனர். இதனால் அன்றாடம் கஞ்சிக்கே வழியின்றி கஷ்டப்படும் பெற்றோர், இப்பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்ற முடியாது மனவேதனை அடைகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் இச்சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனைப் பின்வரும் கவிதைப் பகுதி சித்திரிக்கின்றது;

"…….. புள்ளங்கள பேரு வெட்டி
புல்லு வெட்ட அனுப்பப் போறேன்
படிச்சி கிழிச்சி என்ன ஆவும்
பணம் இல்ல எங்க கிட்ட …..
எம்புட்டு தொல்ல சாமி
எப்போதும் உள்ளது தான்
இம்புட்டு கஷ்டம் தாயி
எங்களுக்கு வெளிச்சம் எப்போ?…."

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 32)

இவ்வாறு, தமது பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் கேட்கும் போதெல்லாம் பணம் கொடுக்க முடியாது வேதனைப்படும் ஒரு தாயின் மனக் குமுறல் தெளிவுபடுத்தப்படுகின்றது. மேலும் இப்பெற்றோரின் அறியாமையாலும், அறிவீனத்தாலும் பெண் கல்வியல் அக்கறை காட்டாது விடுகின்றனர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பதற்கு என பெண்கள் கல்வி கற்பதை அலட்சியம் செய்கின்றனர். அது மட்டுமன்றி, பெண் பிள்ளைகளைத் தோட்டங்களில் தோட்டத் தொழில் செய்வதற்கான காலம் வரும்போது, அதில் பதிவு செய்து பாடசாலை செல்ல விடாது தடுத்து, தோட்ட வேலைகளுக்கு அனுப்பி விடுகின்றனர். இதனால் இச்சிறுவர்களது கல்வியூடான எதிர்காலம் ஒரு கனவாகவே அமைந்து விடுகின்றது. இவ்வாறான விடயங்களை பெனியின் 'ஒரு சுமைதாங்கியின் சுயசரிதை', 'ஒரு லயத்து ராகம்", றசீனாவின் 'நல்லதைச் செய்யுங்க டீச்சர்' முதலிய கவிதைகளில் காணலாம்.

''......... பொட்டப்புள்ள படிச்சி
என்னத்தைக் கண்டா?
மலையேறிக் கொழுந்தெடுத்தா
நாலுகாசு மிஞ்சும்
இருபத்தோராம் நூற்றாண்டின்
தொடக்கத்தில்
இப்படியும் சில பெற்றோர் .......'

(பெனி, (1996), போர்க்களப் பூபாளங்கள், ப. 128)

எனக் கூறுவதன் மூலம், இருபத்தோராம் நூற்றாண்டிலும் தேயிலைத் தோட்டமே உலகம் என்றிருக்கும் பெற்றோரால் பிள்ளைகளது எதிர்காலமே வீணடிக்கப் படுகின்றது என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், மலையகத்தில் அதிகமானோர் பதிவுத்திருமணம் செய்யாது, தாம் விரும்பும் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து, வாழ்க்கை நடாத்தும் நிலை காணப்படுகின்றது. அதேபோல், அவர்களுக்கு ஏற்படும் சிறு சிறு மனக் கசப்புகளுக்கும் இப்பெண்களை விட்டுவிட்டு, வேறுபெண்களைப் பார்த்து, மீண்டும் திருமணம் செய்து கொள்வது சாதாரண விடயமாகி விட்டது. அதனால், சில சந்தர்ப்பங்களில், முதல் மனைவி தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் ஏற்படுகின்றது. இல்லாதபோது, அவள் வீட்டை விட்டு துரத்தப்படுகிறாள். இவ்வாறான சந்தர்ப்பத்தில், அதிகமாகப் பாதிக்கப்படுவது அவர்களது பிள்ளைகளே. சில பிள்ளைகள், தன் தந்தையின் மனைவிக்குச் சேவகம் செய்யும் அடிமைகாளகவும், வேறு சில பிள்ளைகள், கவனிப்பாரற்று அநாதரவாக்கப்படுவதும் இதன் மூலம் தவிர்க்க முடியாதுள்ளது. அதனால் இச்சிறுவர்களின் கல்வி, முழுமையாகப் பாதிக்கப்படுகின்றது. இந்நிலைமைகளைக் கவிதைகள் சித்திரித்திருப்பது மிகக் குறைவு. ஆனால் நாவல் சிறுகதைகள் இந்நிலைமைகளைத் துல்லியமாகச் சித்திரித்துக் காட்டியுள்ளன. புசல்லாவ இஸ்மாலிஹாவின் 'அப்பாவுக்குக் கலியாணம்' எனும் சிறுகதையில் இவ்வாறான விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.[4]

அது மட்டுமன்றி, தாய்மார் வெளிநாடு செல்வதாலும் வீட்டில் சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக, பாடசாலை செல்லும் சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகும் நிலை காணப்படுகின்றது. தாய் வெளிநாடு செல்லும் போது, வீட்டுப் பொறுப்புக்கள் அனைத்தும் பிள்ளைகளைச் சார்ந்து விடுகின்றது. சமைத்தல், நீர் கொண்டுவருதல், ஏனைய வீட்டு வேலைகளைச் செய்தல், குழந்தைப் பராமரிப்பு, பாடசாலை செல்லும் தம்பி தங்கைகளைப் பராமரித்தல் என பல்வேறு வேலைகள் இவர்களில் மூத்த பிள்ளைகளின் தலைகளில் சுமத்தப்படுவதால் இவர்களுக்குப் பாடசாலைக்குச் செல்வதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. அது மட்டுமன்றி பாடசாலைக்குச் சென்றாலும், பாடசாலையில் கொடுக்கும் வேலைகளைச் செய்வதற்கும் இவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதனால், பாடசாலையில் வரும் பிரச்சினைகளால் இவர்கள் இயல்பாகவே கல்வி கற்பதை வெறுத்து விடுகின்றனர்.

இவ்வாறான சிறுவர்கள் பாடசாலைக்கு வந்தாலும் இவர்களைக் கல்விச் சூழலுக்குக் கொண்டுவருவதும் மிகவும் கஷ்டமாகவே உள்ளது. வீட்டுப் பொறுப்புக்களால் இவர்கள் பாடசாலைக்குத் தொடர்ந்து வருவதும் இல்லை. அது மட்டுமன்றி இவ்வாறான சில சிறுவர்கள் அதிகாலையிலேயே எழுந்து வீட்டு வேலைகளை முடித்து, சமைத்து வைத்துவிட்டு, காலைச்சாப்பாடும் இன்றி பசியோடு பாடசாலைக்கு வருவர். இவ்வாறான நிலையில் காலையிலேயே கடுமையாகக் களைப்படைந்த வர்களாக இவர்கள் காணப்படுவதோடு கல்வியில் அக்கறைகாட்ட முடியாதவர்களாக விளங்குவர்.

இந்நிலைமைகள் ஆங்காங்கு சிலருடைய கவிதைகளில் எடுத்துக் காட்டப்படினும் ஆழமாகச் சித்திரிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மலையகத்தின் சுற்றுப் புறச் சூழலும்,வீடுகளின் அமைப்பும் வீட்டில் இட நெருக்கடியும் மலையக மாணவர்களின் கல்விக்கு ஒரு சவாலாக உள்ளது.[5] சிறந்த காற்றோட்டமுள்ள, சுகாதார வசதிகளோடு கூடிய, இடவசதியுள்ள வீடுகள் இவர்களுக்கு இல்லை. அயலில் வாழ்பவர்களும் கற்றவர்களாக இல்லை. அதனால் கல்வியில் ஊக்கப்படுத்தவோ வழிகாட்டவோ யாருமின்றி இவர்கள் இருக்கின்றனர். சுற்றுச் சூழலிலும் குடித்துவிட்டு வருபவர்களின் அடிதடியும், ஏச்சுப் பேச்சுக்களும் காதுகளில் ஒலிப்பதால் அவற்றை வேடிக்கை பார்ப்பதில் சிறுவர்கள் பழகி விட்டனர். மின்சார வசதி லயங்களுக்குக் கிடைத்த பின் வானொலி தொலைக்காட்சி என்பவற்றின் சத்தங்களால் மாணவர்களது கல்வி கற்கும் நிலை மாறிவருகின்றது. ஒரு சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று வரும்போது தொலைக்காட்சி முதலியவற்றைக் கொண்டுவருவதால் ஒரு வீட்டில் உள்ள சத்தம் அனைத்து வீடுகளையும் பாதிக்கின்றது. அவற்றில் தொடர்ந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்களில் மாணவர்கள் மூழ்கி தமது படிப்பை இழந்ததோடு சமூகத்திலும் தீய செயல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இதனை ‘மனவிருள் அகலுமா’ எனும் கவிதை சித்திரிக்கின்றது.

“....லயங்களில் வானொலியும்
லவுட்ஸ்பீக்கர் பேரொலியும்
பயமுறுத்தி இரவெல்லாம்
படிப்பதனைக் குழப்பியது
டீவியில் ஆடல்களும்
அட்டகாசக் கூத்துகளும்
வியப்படையச் செய்தெமது
காலத்தைச் சீரழிக்க

பள்ளி செல் மாணவர்கள்
பாதை தடு மாறியவர்
கள்ளமில்லா மனத்தினிலே
களை முளைத்து வேரூன்றி
கள்ளிகளாய்ப் போனார்கள்
கயமைத் தனத்தாலே
உள்ளந்தான் மாசடைந்து
உமியாகிப் போனார்கள்...”

(குறிஞ்சி நாடன், (1999), குறிஞ்சி நாடன், ப. 91)

எனக் கூறுவதிலிருந்தும், தொலைக்காட்சியில் இடைவிடாது ஒலி ஒளிபரப்பப்படும் நாடகங்கள், திரைப்படங்கள் முதலியவற்றில் இம்மாணவர்கள் மூழ்கி விடுவதால் கல்வியில் உள்ள அக்கறை முழுமையாகக் குறைந்து விடுகின்றது என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

இவ்வாறான காரணங்களால் மாணவர்கள் கல்வியில் பின்னடைந்து, தமது பெற்றோரைப் போலவே தாமும் அடிமைகளாகவும் கூலிகளாகவும் உழைத்து நலிவடைகின்றனர். இவர்களது துன்பக்கதை மிகவும் பரிதாபத்திற்கு உரியதே இதனை சி.வி. வேலுப்பிள்ளை தமது ‘தேயிலைத் தோட்டத்திலே’ எனும் கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்;

“....... அழித்தெழுதாத வோர்
ஆக்கினைப் போல
அலவாங்கு, முள்ளு
மண்வெட்டி கையேந்தியே –

வியர்வை வடித்து
கூலியாய் உழைத்து

வெறுமையுள் நலிந்து
வீழுவ தெல்லாம்

துயரக் கதையிலும்
துன்பக்கதை அதைத்
தொனிக்குதே பேரிகைத்
துடி ஒலிக் குமுறல்!....”

(வேலுப்பிள்ளை, சி.வி., (1969), தேயிலைத் தோட்டத்திலே, ப. 47)

கல்வியில்லா சமூகங்கள் அடிமை வாழ்வினையே அனுபவிக்கின்றன. இம்மக்களின் அடிமைநிலை நீங்க வேண்டுமெனில் சிறுவர்கள் கல்வியில் உயரிய நிலையை அடைய வேண்டும். இல்லாதபோது, இச்சிறுவர்கள் கல்வியில் பின்னடைந்து அவர்களது எதிர்காலம் தமது பெற்றோரின் எதிர்காலத்தைப் போன்று ஆகிவிடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**வளப்பற்றாக்குறை**

சிறந்த முறையில் கற்றல் நடைபெறுவதற்கு வளங்கள் இன்றியமையாதன. வளங்கள் என்று கூறும் போது, பௌதீக வளங்கள், மனிதவளம் இரண்டையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. பௌதீக வளங்களில் பாடசாலைக் கட்டிடங்கள், தளபாடங்கள், நூல் நிலையம், கணனி நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம், சகல

வசதிகளையும் கொண்ட வகுப்பறைகள், கற்பித்தலுக்காகப் பயன்படுத்தக் கூடிய சாதனங்கள் குறிப்பாக கரும்பலகை, கணனிகள், தொலைக்காட்சி முதலியவற்றோடு விளையாட்டு மைதானம், அழகிய சுற்றுப்புறச் சூழல் முதலிய அனைத்தையும் உள்ளடக்கியதாக அமையும். மனித வளம் எனும்போது, போதியளவு ஆசிரியர்கள், சிறந்த நிர்வாகிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பாடத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் முதலியோரைக் குறிக்கும். இவ்விரு வகையான வளங்களும் எவ்வளவுக்கு எவ்வளவு சிறப்பாக அமைகின்றதோ அந்தளவுக்குக் கற்றலும் சிறப்பாக நடைபெறும். கல்வியில் சிறந்து விளங்கும் பாடசாலைகளில் இவ்வாறான வளங்கள் அனைத்தும் அல்லது பெரும்பகுதி சிறப்பாக அமைந்து காணப்படுகின்றன.

ஆனால், மலையகத் தோட்டப்புறப் பகுதியில் பாடசாலைகளை நோக்கும்போது அங்கு வளப்பற்றாக்குறை கல்வி பெறுவதற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. சில தோட்டப்பகுதிகளில் பாடசாலைகளே இல்லை. அதனால் அம்மாணவர்கள் கல்விக்காகப் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டியுள்ளது. அதனால் சிலர் கல்வி கற்க ஆசையிருந்தும் கல்வி கற்பதற்குச் செல்லாதிருக்கின்றனர். இக்பால் அலியின் 'ஏகத்துவம்' எனும் கவிதை இதனைப் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது;

> "இத்தனை நாளும் பொழுதும்
>     கல்வியெது வென வறியார்
> சிந்திக்கமுற் பட்டாலு மென்ன
>     கல்விக்கூட மிருக்குமோ வில்லை
> கற்றிட வழிகள் திறக்குமோ........"
>
> (இக்பால் அலி, (2001), புள்ளிகளில் சில புள்ளிகள், ப. 60)

மாணவர்கள் ஒழுங்கான முறையில் கற்பதற்குப் போதிய இடவசதி, வெளிச்சம், காற்றோட்டமுள்ள வகுப்பறைகளைக் கொண்ட பாடசாலைக் கட்டிடங்கள் தேவை. அழகிய பாடசாலைச் சூழல் மாணவர்களை இயல்பாகவே கற்றலின் பக்கம் ஈர்க்கக் கூடியது. மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பாடசாலைக்கு வருகின்றனர். அதனால் பாடசாலைச் சூழல் கட்டிடங்கள் அவர்களது மனநிலைகளில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும். இது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். ஆனால் மலையகத் தோட்டப் புறங்களில் உள்ள அதிகமான பாடசாலைகள் போதிய இடவசதி கொண்டனவாகவோ, மாணவர்களைக் கவர்வனவாகவோ அமையவில்லை. மாறாக மாட்டுக் கொட்டில்கள், பட்டிகள் போன்று விளங்குகின்றன. இது மாணவர்களுக்குக் கல்வியில் மேலும் வெறுப்பை ஊட்டுகின்றது. புதிய புதிய கற்பித்தல் உபகரணங்களைக் கொண்ட சுத்தமான அழகிய வகுப்பறைகள் இருக்கும் போது மாணவர்கள் கற்றலிலும் அதிக ஊக்கம் செலுத்துவர். ஆனால் இவ்வாறான நிலைமையால் மாணவர்கள் கல்வியைவிட்டும் விலகி வேறு தொழில்களுக்குச் சென்று விடுகின்றனர். இந்நிலைமைகள் சு. முரளிதரனின் 'இந்தப் பழமும் புளிக்கும்', பெயாவெல் ஏ. செல்வராஜின் 'எங்களூர் ஸ்கூல்', சிவ. இராஜேந்திரனின் 'இருவர் பாடல்' முதலிய கவிதைகளில் கூறப்பட்டுள்ளன. அவ்வகையில்;

> "..........இன்னும்
> இங்கே
> அதே
> கொட்டில் .........
> அதே
> ஒற்றைப் பிரம்பு
>
> எங்கள்
> மாணவர்கள்
> இந்த கல்விப் பழம்
> புளிக்குமென
> வேலைக்கு
> போய்விட்டார்கள்!.."
>
> (முரளிதரன், சு., (1986), தியாக யந்திரங்கள், ப. 18)

எனவரும் கவிதைப் பகுதி நோக்கத்தக்கது. பல பாடசாலைகளில் கட்டிடங்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. அத்தோடு, எழுதுவதற்கு ஒழுங்கான கரும்பலகைகளோ, ஒழுங்காக அமர்ந்து படிப்பதற்குத் தளபாடங்களோ இல்லாத நிலை காணப்படுகின்றது. மாணவர்கள் உடைந்த கதிரைகளில் அமர்ந்து படிக்கும் நிலை நிலவுகின்றது. சில பாடசாலைகளில் கதிரைகளே இன்றி பாய் விரித்து மாணவர்கள் நிலைத்தில் அமர்ந்து கல்வி கற்கும் அவல நிலையும் நிலவுகின்றது.[6] பெயாவெல் .ஏ. செல்வராஜின் 'எங்களூர் ஸ்கூல்' எனும் கவிதையில் இவ்வாறான நிலைமைகள் சில பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன;

“இடிந்து விழும்
சுவர்கள்
வெள்ளைக்
கரும் பலகைகள்!
காலுடைந்த
கதிரைகள்
............
இதுதான்
எங்கள்
பள்ளி ............”

(பெயாவெல் செல்வராஜ், ஏ., (1995), காவிரி முதல் மாவெலி வரை, ப. 13)

சில பாடசாலைகளுக்கு ஒழுங்கான கூரைகள்கூட, இல்லாத நிலை காணப்படுகின்றது. சில பாடசாலைகளில், மழைகாலங்களில் மழைநீர் பாடசாலைக்கு உட்புறமாக ஓடுவதால் கற்கவோ, கற்பிக்கவோ முடியாத நிலை காணப்படுகின்றது. இயற்கை அனர்த்தங்களால் பாடசாலைக் கட்டிடங்களில் சிதைவுகள் ஏற்பட்டாலும் அவை உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுவதில்லை என்பதை ம. சண்முகத்தின் ‘கூரையைக் காணவில்லை’ எனும் கவிதை கூறுகின்றது. காற்றினால் பாடசாலையின் கூரை சிதைவடைந்தது. அதனை அதிகாரிகளோ, பொதுமக்களோ அனைவரும் வந்து பார்வையிட்டு அறிக்கைகளை எல்லாம் எழுதினர். புதிய கூரை செய்து தருவதாக வாக்களித்தனர். ஆனால் வருடக் கணக்காகியும் அப்பாடசாலைக்கு வானமே கூரையாக விளங்குகின்றது என இக்கவிதையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது;

“.........நாளைகள் நேற்றாகி
பலகைகள் விறகாகி
கடிதங்கள் கோப்பாகி
வானமே கூரையாச்சு
இன்னும் கூரையைக்
காணவில்லை –
எங்கோ ஒளித்திருக்கிறதென்று
எவருக்கும் தெரியவில்லை.......”

(சண்முகநாதன், ம., (1995), வாழ வா தோழா, ப. 63)

சில பகுதிகளில் கட்டிடங்கள் இருக்கின்றன. ஆனால், ஏனைய வளங்கள் இல்லாத நிலைமையும் நிலவுகின்றது. அத்தோடு, பாடசாலைகளில் வீணான முரண்பாடுகளை உருவாக்கி பாடசாலைகளை மூடவைக்கும் இழிவான நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகள் மலையக மாணவர்களின் கல்வியில் மேலும் மேலும் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ம. சண்முகநாதனின் ‘கசக்கும் உண்மை!’ எனும் கவிதையில் இந்நிலைமைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் கொடுக்கின்ற வளங்கள் சரியான முறையில் பாடசாலைகளுக்குச் சென்றடையாமை, உரிய காலத்தில் பாடநூல்கள் கிடைக்காமை, அரசாங்கம் வழங்கும் தளபாடங்கள் இப்பாடசாலைகளுக்குக் கிடைக்காமை, மின்சாரம், மலசலகூடம், நீர் வசதிகள் இன்மை, நவீன கற்பித்தலுக்கான உபகரணங்கள் இன்மை, ஆய்வுகூட வசதிகள் அதற்கான உபகரணங்கள் சரிவரக் கிடைக்காமை, கிடைக்கும் வளங்களை நிர்வாகத்தினர் அபகரித்தல் முதலிய பிரச்சினைகள் அதிகமான மலையகப் பாடசாலைகளில் காணப்படுகின்றன. எனினும் இவை பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட வண்ணம் உள்ளன. ஆனால் இவைகள் பற்றி மலையகக் கவிதைகள் பேசத் தவறி விட்டன.

பௌதீக வளங்கள் மட்டுமன்றி, மனித வளங்கள் சார்ந்த பிரச்சினைகளும் உள்ளன. தோட்டப்புறம் தவிர்ந்த, ஏனைய பிரதேசங்களில் அதிகமான பாடசாலைகளில், இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட, அதிகமான ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் தோட்டப்புறப் பாடசாலைகளில் இருக்க வேண்டிய ஆசிரியர்களை விட, மிகக் குறைந்தளவு ஆசிரியர்களே உள்ளனர். நாற்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்பது தற்போதைய ஆசிரியர் – மாணவர் நிலையாகும். ஆனால், அதிகமான தோட்டப் பாடசாலைகளில் ஒரு பாடசாலைக்கு எத்தனை மாணவர்கள் இருந்தாலும் ஒருவர் அல்லது இருவரே ஆசிரியர்களாக இருந்தனர். இவ்வாசிரியர்கள், தாமே அதிபர்களாகவும் ஆசிரியராகவும் கடமை புரிவர். பல வகுப்புகளுக்குரிய மாணவர்களை ஒரே இடத்தில் வைத்து கற்பிக்கும் நிலை காணப்படுகின்றது. இவர்களுக்குச் சரியான முறையில் கற்பித்தலைச் செய்வதும் இம்மாணவர்களுக்குச் சரியான கற்றலைச் செய்வதும் சிரமமாகவே உள்ளன. ‘எங்களூர் ஸ்கூல்’ எனும் கவிதையில்,

"............. ஆயிரம்
பிள்ளைகள்
ஆனால் ஓர்
ஆசிரியர்........"

(பெயாவெல் செல்வராஜ், ஏ., (1995), காவிரி முதல் மாவெலி வரை, ப.13)

எனக் கூறுவதிலிருந்தும் இதனை அறியலாம். இவ்வாறு ஒரு ஆசிரியர் இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கவோ, அவற்றைத் திருத்தவோ, மீள வலியுறுத்தல் செய்வதற்கோ பின்னூட்டல் செய்வதற்கோ இவ்வாசிரியர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. அனைத்துப் பாடங்களையும் சரியான முறையில் கற்பிப்பதற்கும் சந்தர்ப்பம் அமைவதில்லை. அதனால், மாணவர்கள் சரியான கல்வி அடைவுகளைப் பெறுவது மிகவும் கஷ்டமாகவே உள்ளது. தூர இடங்களில் இருந்து இப்பாடசாலைக்கு ஆசிரியர்களாக வருபவர்கள் போக்குவரத்தில் உள்ள சிரமங்களால் தாமதமாகிப் பாடசாலைக்கு வரும் நிலை உள்ளது. அதனால் மாணவர்களும் தாம் நினைக்கும் நேரங்களில் பாடசாலைக்கு வருகின்றனர். அதனால் அவர்களுக்குச் சரியான முறையில் வகுப்புகளை நடாத்துவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, ஒரு ஆசிரியர் உள்ள பாடசாலையில், அவ்வாசிரியர் ஏதோவொரு காரணத்தால் விடுமுறை எடுக்கும்போது, பதில்கடமைகள் செய்வதற்கான ஆசிரியர்கள் இன்றி, பாடசாலையை மூட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் அரசாங்க சட்டப்படி அவ்வாறான நிலை ஏற்படும்போது அதனை ஈடு செய்வதற்கு விடுமுறை நாட்களில் பாடசாலையை நடாத்த வேண்டும். ஆனால் அவ்வாறு நடாத்தப்படுவது மிகவும் குறைவு. அவ்வாறு நடாத்தினாலும் ஆசிரியரும் பாடசாலையும் அன்றி மாணவர்கள் வருவதில்லை. இந்நிலைமைகளை அறிந்தும் சில ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் கரிசனையின்றி விடுமுறை எடுக்கின்றனர். இந்நிலைமை றசீனா புகாரின் 'குருவுக்கோர் வாழ்த்து .......!' எனும் கவிதையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது;

".............. கடமை கண்ணியம் கட்டுப்பாடெல்லாம்
கரிசனையாய் வகுப்பில் சொல்லிடும் நீரே
உங்கள் கடமையை மறந்தே வகுப்புக்கு
வராமலே 'கட்' அடிப்பீர் நாளும் ......"

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 13)

அதேவேளை, குறிப்பிட்ட பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் மலையகத்தில் இல்லாதிருக்கின்றனர். அதாவது ஒவ்வொரு பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனை பெனியின் 'உண்டா இல்லையா?' எனும் கவிதை பின்வருமாறு விளக்குகின்றது;

"ஆசிரியர் பற்றாக்குறை என
கணித பாடமே நடக்காத தால் ....."

(பெனி, (1999), நெருப்பு ஊர்வலங்கள், ப. 37)

இம்மாணவர்களுக்கு இவ்வாறு போதியளவு ஆசிரியர்களின்மை குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களின்மை முதலிய காரணங்களால் மாணவர்கள் பாடசாலைகளில் வந்து வீணாகக் காலத்தைக் கடத்திவிட்டுச் செல்லும் அவலநிலை பல பாடசாலைகளில் நிலவி வருகின்றது. சந்தனம் சத்தியநாதனின் 'இல்லை மலையகத்தில்', 'வருக வருக உங்கள் வரவே நல்வரவு' முதலிய கவிதைகளில் இவ்விடயங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில்;

"....பள்ளிச்சாலை இங்கிருக்கு
பல வசதி இங்கில்லை
கற்பிக்க ஆசான்களும்
கணிசமானோர் இங்கில்லை
கடமைக்கு
மாணவரும்
காலையிலே வந்திருந்து
ஈயோட்டிச் சென்று விட்டால்
ஈடேறு மா எம் சமூகம் ......."

(சந்தனம் சத்தியநாதன், (2003), மலைத் தென்றல், ப. 11)

எனவரும் பகுதி நோக்கத்தக்கது. இம்மாணவர்களுக்குச் சுய கற்றலுக்கான வழிகாட்டல்கள் கிடைப்பதும் மிகக் குறைவு. அவ்வாறு வழிகாட்டல் கிடைத்தாலும் அதனைப் பயன்படுத்துவதும் சிக்கல் மிகுந்ததாகவே உள்ளது. மாணவர்கள் வாசிக சாலைகளைப் பயன்படுத்துவது மிகவும் குறைவாகவே உள்ளது. அதனால் வாசிகசாலைகள் வாசிப்போர் இன்றி மூட வேண்டிய நிலையில் இருக்கின்றன. பெனியின் 'அத்திவாரமும் கூரையும்', குறிஞ்சி நாடனின் 'இல்லை கூட்டம்' முதலிய கவிதைகளில் இந்நிலைமைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகளால் இம்மாணவர்கள் கல்வியில் பின்னடைந்தவர்களாக உள்ளனர்.

மேலும், இச்சிறுவர்களில் சிலர், உரிய காலத்தில் பாடசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை.இதற்கு முக்கிய காரணம் பெற்றோரின் அறியாமையே.சில சமயங்களில் கிராம சேவகர்கள், சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள் தோட்டப் புறங்களுக்குச் செல்ல வேண்டி ஏற்படும் போது பாடசாலைக்கே செல்லாது வீட்டில் இருக்கும் சிறுவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அவ்வேளை அச்சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பும்படி அறிவுரை வழங்குவர். அதனால் தூண்டப்பட்ட பெற்றோர், அம்மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அழைத்து வந்து பாடசாலையில் சேர்த்தக் கொள்ளுமாறு கூறுவர். அதற்கிணங்க பாடசாலையில் அவர்களை ஏற்றுக் கொண்டாலும், அவர்களை ஆண்டு ஒன்றிலேயே சேர்த்துவிடுவர். சிலவேளை, அச்சிறுவர்கள் மூன்றாம் நான்காம் ஆண்டுகளுக்கு உரியவர்களாக விளங்குவர். அவர்கள் ஆண்டு ஒன்று மாணவர்களோடு சேர்ந்து படிப்பதில் அதிக ஆர்வம் காட்டாத நிலையும் ஏற்படுகின்றது. அதனால், கொஞ்ச நாட்களுக்குள்ளேயே அவர்கள் பாடசாலையை விட்டும் இடைவிலகல் செய்கின்றனர். இது பெற்றோரின் அறியாமையால் ஏற்படுகின்றது. இவ்வாறான விடயங்களையும் மலையகக் கவிஞர்கள் சித்திரிக்க வேண்டும்.

**மாணவர்களின் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளாது ஆசிரியர்கள் செயற்படல்**

ஆசிரியர்கள் கற்பித்தலைச் செவ்வனே செய்வதற்கு மாணவர்களை இனங்காணல் மிகவும் இன்றியமையாததாகும். அதாவது ஒவ்வொரு மாணவரும் எவ்வாறான சூழலில் இருந்து வருகின்றனர். அவர்களது குடும்ப நிலைமைகள், அவர்களது அறிவுமட்டம் முதலியவற்றை அறிந்திருக்கும் அளவுக்கு, ஓர் ஆசிரியரால் தமது கற்பித்தலைச் சிறப்பாகச் செய்யலாம். மாணவர்கள் கல்வியின் இலக்குகளை அடைவதும் இலகுவாக அமையும். வறுமையான குடும்பங்களில் இருந்து சில மாணவர் வருவர். மற்றும் சிலர் உளப் பின்னடைவுக்கு உட்பட்டவர்களாகவும் மற்றும் சிலர் சில நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாகவும், இன்னும் சிலர் பெற்றோரால் துன்புறுத்தப்படுவோராகவும், தந்தையின் போதைவஸ்த்துப் பழக்கத்தால் விரக்தி அடைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களது மனநிலைகளைப் புரிந்து கொள்ளாமல் கற்பித்தலைச் செய்வதென்பது அசாத்தியமானது. அதனால்தான் தற்போது முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போதே ஆசிரியர்கள் இவர்களது நிலைமைகளைக் கண்டறியும் வண்ணம் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துகின்றனர்.

மலையக மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளிலும் கிராமப்புற தோட்டப் பாடசாலைகளிலும் கல்வி கற்கின்றனர். நகரப் புறங்களைச் சார்ந்துள்ள பாடசாலைகளில் மலையக தோட்ட அதிகாரிகளதும் ஏனைய சாதாரண மக்களதும் பிள்ளைகளும் தோட்டச் சிறுவர்களும் கல்வி கற்பர். இவ்வாறான நிலையில் சில ஆசிரியர்கள் இம்மாணவர்களிடம் பாரபட்சமாக நடந்து கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அதனால் இவர்கள் மேலும் கல்வியில் பின்னடைவதோடு, தாம் பின்தள்ளப்படுகின்றோம், தம்மீது பாரபட்சம் காட்டப்படுகின்றது என்ற ஏக்கத்துடன் கல்வி பயில்வர். இராகலைப் பன்னீரின் 'இன்று எம்மவர்' எனும் கவிதையில் பாடசாலையில் நடைபெறும் விழாக்கள் எதிலும் இம்மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை என்பதையும் வகுப்பிலும் பின்வரிசைகளிலேயே இம்மாணவர்கள் அமர்த்தப்படுகின்றனர் என்ற பரிதாப நிலைமையினையும் சித்திரித்துக் காட்டியுள்ளார்;

"....பாரதி விழாத் தொட்டு
பள்ளியில் பற்பல
விழாக்கள்
நாங்கள் நாடவே முடியாது
'லயத்தானை' லட்சியஞ் செய்வதில்லை
வகுப்பில்
முன்வரிசைகளிலெல்லாம்
முன்னேறியவர்கள்
பின்னே இருப்பவர்களோ
பின்தள்ளப்பட்டவர்கள்!........"

(இராகலைப் பன்னீர், (1999), புதிய தலைமுறை, பக். 16 – 19)

அது மட்டுமன்றி, இம்மாணவர்களின் வறுமை நிலையை உணராத ஆசிரியர் இவ்வாறு வரும் விழாக்கள் அனைத்துக்கும் இம்மாணவர்களிடம் பணம் கொண்டு வரும்படி

கூறுகின்றனர். அவ்வாறு கொண்டு போகாத மாணவர்களைத் தூற்றுகின்றனர். அதனால் மாணவர்கள் தம் பெற்றோரிடம் பணம் தரும்படி கேட்டு நிற்பர். கூழுக்கே வழியில்லாமல் கஷ்டப்படும் அவர்களது நிலையை உணராத இச்செய்கையினால், இம்மாணவர்கள் தம் கல்விக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய சூழலும் ஏற்படுகின்றது. இவ்வாறான விடயங்களை றசீனா புகாரின் 'அம்மாக் காரியும் சும்மா சும்மா சல்லியும்' எனும் கவிதையில் காணலாம்.

அத்தோடு, இம்மாணவர்கள் வறுமை காரணமாக ஒழுங்காக உடையணிந்து வருவதற்கும் வாய்ப்பின்றி இருக்கின்றனர். அரசாங்கம் இலவச சீருடை வழங்கினாலும் அவற்றைத் தைப்பதற்குக் கூலி கொடுக்க வசதியற்றவர்களாக இருப்பதால் மாற்றியுடுக்க உடையின்றி ஒரு ஆடையையே எந்நாளும் அணிவர். இவர்களது வறுமை நிலையை உணராத சில ஆசிரியர்கள், இவர்களது ஆடைகளைக் கண்டதுமே உமிழ்வர். அம்மாணவன் எப்படியோ பாடசாலைக்கு வருகிறானே என்பதையிட்டு மகிழ வேண்டியவர்கள், அம்மாணவர்களின் மனதில் தீராத வடுவை ஏற்படுத்துகின்றனர். 'இன்று எம்மவர்' எனும், இராகலைப் பன்னீரின் கவிதையில் இவ்வாறான நிலைமைகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன;

"............ செல்லரித்த
சேட்டைப் பார்த்து
சேர் உமிழ்வார்.
மூதேசி முட்டாள் எனத்
திட்டுவார்!
நெஞ்சுக்குள்
நெருப்பு பிடிக்கும்!......."

(இராகலை பன்னீர், (1999), புதிய தலைமுறை, ப. 16)

இவ்வாறான சம்பவங்கள் நிகழும்போது, மாணவர்கள் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு, கல்வி கற்பதை வெறுக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. அது மாத்திரமன்றி, ஆசிரியர் மாணவர்களின் நிலைமைகளை உணராது தண்டனைகள் வழங்குகின்றனர். மாணவர்களுக்குத் தண்டனைகள் வழங்குமுன், அவர்களது சூழ்நிலைகளை நன்கு ஆராய வேண்டும். சிலவேளை எவ்வாறான ஒரு தவறாயினும் தண்டனைகள் வழங்குவதற்கு முன், அவர்களது சூழ்நிலைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். உடலியல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தற்போது சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் இன்றியமையாமை மலையக மாணவர்களின் நிலையிலிருந்து நோக்கும்போது நன்கு புரிந்து கொள்ள முடியும். கடுமையான தண்டனை வழங்கப்படுவதால் அதிகமான மலையக மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர். மற்றும் சிலர் பாடசாலை செல்வதைச் சிறைச்சாலைக்குச் செல்வதுபோல் உணர்கின்றனர். மெல்லக் கற்கும் மாணவர்கள், கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்கள், நெறி பிறழ்ந்த மாணவர்கள், பிரச்சினைக்குரிய மாணவர்கள் ஆகியோருக்கு சில ஆசிரியர்கள் கடுமையான உடல் ரீதியான தண்டனைகளை வழங்குகின்றனர். இவ்வாறான தண்டனைகள் ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைவதில்லை. மாறாக அவர்களது இச்செயற்பாடுகளுக்கு மேலும் வலுவூட்டுவதாகவே இத்தண்டனைகள் அமையும். ஆசிரியர்கள் கட்டாயமாக மாணவர்களது பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதன் மூலம் பிரச்சினைக்குரிய மாணவர்களையும் நல்லதொரு நிலைக்குக் கொண்டுவர முடியும். ஆனால் இவ்வாறு செய்யப்படுவது மலையகத் தோட்டப் பாடசாலைகளில் மிகக் குறைவாகவே உள்ளது.

அதிகாலையிலேயே மலையக மாணவர்கள் சிலர், பாடசாலைக்குச் செல்ல முடியாது என்று அடம்பிடிப்பர். அது மட்டுமன்றி கண்ணீரும் கம்பலையுமாகவே பாடசாலை செல்கின்றனர். சென்றாலும் அங்கும் ஆசிரியரின் தண்டனைகளால் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு கைதிபோல் எந்தவித சுதந்திரமுமின்றி முடக்கி வைக்கப்படுகின்றனர். இவ்வாறான நிலைமைகளை 'நடமாடும் கைதிகள்' எனும் கவிதை பின்வருமாறு சித்திரிக்கின்றது.

"...கையில் தொங்கிய பை
கன்னத்தில் சுரந்த நீர்
பைய பைய நடக்கும் வயதிலும்
கல் என்ற சுமை
முள்ளாய் குத்த
முரண்டு பிடித்தது மனம்
தண்டனைக்குப் பயந்து
மௌனமானது
.............

முதுகில் விழுந்தது அடி
இரத்தமெல்லாம் சில்லிட்டு
உயிர் பிரிந்தாற் போல்
ஏய் பாடநேரத்தில் எங்கே பார்வை
அதட்டிய குரலில் அடியின்
பருமன் தெரிந்தது
குற்றமின்றியே சிறைசென்றவர்கள்
நாமாகத்தான் இருக்கும்
அங்கு கம்பிகள்
இங்கு கதிரைகள்
சீருடை ஒன்றுதான் ஆனால்
ஒவ்வொரு மாலையும் விடுதலை
ஒவ்வொரு காலையும்?.....''

(பன்னீர்ச் செல்வம்,மை., (2002), ஆறு ஐந்தாய் மாறும், 'நடமாடும் கைதிகள்')

மாணவப் பருவத்தில் ஆசிரியர்கள் வழங்குகின்ற கடுமையான தண்டனைகள் அவர்களது மனங்களில் ஆழமான தாக்கத்தையும் ஆழமான பதிவினையும் ஏற்படுத்துகின்றன. அந்த ஆசிரியர்களைக் காணும் போதெல்லாம் அவர்களின் நல்ல குணங்களைவிட, அவர்கள் வழங்கிய தண்டனைகளே ஞாபகத்திற்கு வந்துவிடுகின்றது. இது சாதாரண மனிதனின் இயல்பு. இதனை பெனியின் 'வணக்கம்' எனும் கவிதை பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது;

''.....ஐந்தாம் வகுப்பு
ஆத்ம நண்பன்
அந்தோனி சாமிக்கு
கணக்கக் காண்பித்தேன் - என
பிரம்பால் அடி
பின்னியிருக்கிறீர்கள்
ஞாபகமிருக்கிறதா டீச்சர்
கண்களில் நீர் வழிய – நான்
சிரித்துக் கொண்டிருந்தேன்.

........... ......... ..........
நீங்கள் என்னைக் கிள்ளுவீர்கள்
சதை பிய்த்து விடுமாப்போல்
..............
ஒஹோ
துன்புறுத்தல் கூட
சில வேளைகளில்
அன்பின் வெளிப்பாடோ? ........''

(பெனி, (1999), நெருப்பு ஊர்வலங்கள், ப. iv – vi)

பெற்றோர் பிள்ளைகளை எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆனால் ஆசிரியர்கள் மாணவர்களை உரிய முறையில் நடாத்தத் தவறும்போது அவர்களது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமடைகின்றன.ஆரம்பத்தில் பாடசாலைகள், சிறுவர்கள் தேயிலைச் செடிகளை நாசம் செய்யாது அவர்களைச் சிறை வைப்பதற்கான கூடங்களாகவே அமைக்கப்பட்டன.அதனால் ஆசிரியர்களும் அம்மாணவர்களைத் தமது சொந்த வேலைகளைச் செய்துகொல்வதற்காகப் பயன்படுத்தினர்.இவற்றை எடுத்துக்காட்டி, இந்நிலைமைகளைக் கண்டிப்பதாகவே சி.வே.ராமையாவின் 'வாத்தியார்' எனும் கவிதையும் றசீனாவின் 'தறுதலையாய் ஆக்காதீங்க' எனும் கவிதையும் அமைந்துள்ளன. இதனைப் பின்வரும் கவிதைப் பகுதி உறுதி செய்கின்றது;

''.......... நம்பித்தானே பள்ளிக்கூடம் அனுப்புகிறோம் - அவுங்களை
நாயைப் போல நடத்துறது ஏனுங்க........
தம்பிமாரே நாங்க கெஞ்சிக் கேட்கிறோ முங்க
தறுதலையாய் ஆக்காதீங்க பிள்ளைய.........''

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 10)

ஆசிரியர்கள், மாணவர்களின் தனிப்பட்ட திறன்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் இனங்கண்டு, அவற்றை விருத்தி செய்வது மிகவும் இன்றியமையாதது. சில மாணவர்கள் கற்றலில் பின்தங்கியவர்களாகக் காணப்பட்டாலும், தொழில்நுட்பத் திறன்கள், விளையாட்டு முதலியவற்றில் ஆற்றல் கொண்டோராக விளங்குவர். அவ்வாறான நிலையில் இவற்றை இனங்கண்டு அவர்களை அத்துறைகளில் முன்னேறுவதற்கான வழிகாட்டல்களை ஆசிரியர் செய்ய வேண்டும். வகுப்பில் ஆசிரியரின் கணிப்பையும், அன்பையும் பெறாத மாணவர்கள், விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் காலங்களில் ஆசிரியர்களது முழுமையான கணிப்புக்கும் அன்புக்கும் உட்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்கள் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடவும்,

தொடர்ச்சியாக பாடசாலைக்கு வருவதற்கும் வழியமைப்பதற்கான தூண்டியாகக்கூட அமையலாம். பல்வேறு வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் உதவியோடு இம்மாணவர்களின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டங்களை வகுக்கவும் முடியும். ஆனால், இப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை இவ்வாறான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறாக அமைகின்றது.

அதுமட்டுமன்றி, ஆசிரியர்களது தியாக மனப்பான்மையும் இவ்வாறான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாதது. இப்பிரதேசங்களில் வேலை செய்வோருக்கென விசேட இடர்காலக் கொடுப்பனவுகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்டாலும் இப்பாடசாலைகளில் வேலைசெய்யும் அதிகமான ஆசிரியர்கள், இம்மாணவர்களது முன்னேற்றத்திற்காகத் தியாக மனப்பான்மையுடன் செயற்படுவது குறையாகவே இருந்தது. இப்பிரதேசங்களில் போக்குவரத்திற்கும் சிரமங்கள் காணப்படுவதால் கல்வியதிகாரிகள் பெருமளவில் இப்பாடசாலை நிலைமைகளைக் கண்டறிவதற்குச் செல்வது மிகக் குறைவாகவே உள்ளது. இந்நிலைமை இவ்வாசிரியர்களுக்கு தாம் விரும்பியபடி பாடசாலையை ஓட்டுவதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது. அத்தோடு பாடசாலைக்கென வழங்கப்படும் அதிகமான வளங்களை இவர்கள் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்குக் கரிசனை காட்டுவதில்லை. பெறும் வளங்களையும் தமது சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நிலையும் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி, அரசாங்கத்தால் மாணவர்களின் கல்விக்காக வழங்கப்படும் குணநல உள்ளீட்டுப் பொருட்களை இவர்கள் பெற்றுக் கொள்வதில் அக்கறையின்றி இருப்பதால், இவை இம்மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதனால் கற்றலுக்குத் தேவையான உபகரணங்களை இம்மாணவர்கள் பணம் கொடுத்தே வாங்க வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளும் மலையகக் கவிதைகளில் எதிர்காலத்திலாவது இடம்பெற வேண்டும்.

**மலையக மாணவர்களின் மன ஆதங்கம்**

மலையக மாணவர்களில் சிலர் தமது வறுமை, சூழ்நிலை முதலிய காரணங்களால் தம்மால் கல்வியைத் தொடர முடியாமையை இட்டு மிகவும் வேதனைப்படுகின்றனர். ஏனைய மாணவர்களைப் போல் தமக்கும் கல்வி கற்பதற்கது ஆசை இருந்தும் தம் இயலாமைகளையும், தம் பெற்றோரின் நிலைமைகளையும் நினைத்து வருந்துகின்றனர். அதேவேளை தமக்குச் சரியான வழிகாட்டல் இன்மையினையிட்டு ஏங்குகின்றனர். இவ்வாறான நிலைமைகள் வீரா.பாலசந்திரனின் 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', வ.ஐ.ச. ஜெயபாலனின் 'எழில்முடி புனைக', பெனியின் 'ஆதங்கம்', 'வாசகன்', 'இரண்டாம் தாய் மடி', குறிஞ்சி இளந்தென்றலின் 'திரும்பிப் பார்க்கிறேன்', றசீனா புகாரின் 'மலையகத்து சுப்பன்' முதலிய கவிதைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பெற்றோரின் அறிவீனம், வறுமை காரணமாக படிப்பதற்கு ஆசையிருந்தும் மாணவர்களின் கல்வி மறுக்கப்படுவதால் தம் மன ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாக 'மலையகத்து சுப்பன்' எனும் கவிதை அமைந்துள்ளது. அவ்வகையில்,

"...... பள்ளிக்கூடம் செல்லவென்று
பகலெல்லாம் நினைப்பதுண்டு
'சுள்ளி' பொறுக்க போவென்று
துரத்திடுவார் என் அப்பா.

படிக்க எனக்கு ஆசையுண்டு
பட்டம் பெறவும் எண்ணமுண்டு
குடிக்க கஞ்சிக் கலையும் போது
குழந்தை ஆசை என்னவாகும்........?

குடிகார அப்பன் அவன்
கொடும் பாவி தான் என்பேன்
படிக்க கேட்கும் பிள்ளையிடம்
பார் தொழுவ வேலை என்பான்......."

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 14)

எனும் கவிதைப்பகுதி நோக்கத்தக்கது. இவ்வாறு மாணவர்களுக்குக் கற்று முன்னேற ஆசை இருந்தும் தந்தைமாரின் அறிவீனம், குடிப்பழக்கம் முதலியவற்றால் பிள்ளைகளின் எதிர்காலமே பாழாக்கப்படுகின்றது. அதனால் தொடர்ந்தும் இம்மாணவர்கள் தம்மால் படிக்கமுடியவில்லையே என்ற ஏக்கத்தோடு வாழ்கின்றனர்.

ஏனைய மாணவர்கள் அழகாக உடையணிந்து பாடசாலைக்குச் செல்லும் காட்சியைக் கண்டு ஏங்கி வாழ்வோராக இவர்கள் காணப்படுகின்றனர். தமக்கு வசதிவாய்ப்புகளும் சரியான வழிகாட்டலும் இல்லாததால் எவ்வளவு அறிவிருந்தாலும் அதனை வெளிப்படுத்துவதற்கும், கல்வியின் மூலம் முன்னேறுவதற்கும் வாய்ப்பு இல்லாத நிலை இம்மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, ஏனைய மாணவர்கள் பாடசாலை சென்று கல்விகற்று குதூகலமாக இருக்கும் காட்சிகளைப் பார்க்கும் போது இம்மாணவர்கள் தங்களின் இரங்கத்தக்க நிலையை நினைத்து வாடுகின்றனர். இம்மாணவர்கள் காடுவழியே திரிந்து சுள்ளி பொறுக்கியும், ஹோட்டல்களில் தட்டு கழுவியும், கடைகளில் வேலைபார்த்தும், மலை வேலைகளில் ஈடுபட்டும், வீடுகளில் பாத்திரம் தேய்த்தும் கஷ்டப்பட, ஏனைய அவர்களுடைய வயதுச் சிறுவர்கள், கல்வி கற்பதில் அக்கறை காட்டுகின்றனர். இந்நிலைமைகளைச் சித்திரிப்பதாக 'இரண்டாம் தாய்மடி', 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', 'எழில்முடி புனைக' முதலிய˙ கவிதைகள் விளங்குகின்றன.

"........... நீலக்காற் சட்டை
வெள்ளைச் சட்டை
கையில் புத்தகங்கள் - என்று அந்த
கண்மணிகள் போகும்
கண்கொள்ளாக் காட்சியில் - இவன்
கரைந்து போகிறான்.
என்
வயதுச் சிறுவர்கள்
இப்படிப் படிக்கையில்
நானெங்கே........?..."

(பெனி, (1999), நெருப்பு ஊர்வலங்கள், ப.x)

எனக் கூறுவதிலிருந்து இம்மாணவர்களின் கல்வியுலகம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடியும். மலையக இளைஞர்களின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக மா.செ மூக்கையா அவர்களும் அரிய பல கருத்துகளை முன்வைத்துள்ளார்.[7]

வீராபாலச்சந்திரனின் 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', வ.ஐ.ச.ஜெயபாலனின் 'எழில்முடி புனைக', குறிஞ்சி நாடனின் 'விரட்டடா பஞ்சந் தன்னை', தமிழோவியனின் 'இழிவினை நிறுத்து', பெனியின் 'ஒரு சமூகப் பணியாளன் உருவாகிறான்', இக்பால் அலியின் 'நானொரு புல்லாங்குழல்', 'புள்ளிகளில் சில புள்ளிகள்', 'ஏகத்துவம்', சந்தனம் சத்தியநாதனின் 'தவிர்த்து விடுங்கள்', குறிஞ்சி இளந் தென்றலின் 'திரும்பிப் பார்க்கிறேன்', றசீனா புகாரின் 'நல்லதைச் செய்யுங்க டீச்சர்' முதலிய கவிதைகள் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படல் பற்றிக் கூறுகின்றன.

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும்போது அவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப் படுகின்றது. ஏனைய மாணவர்கள் அழகாக ஆடைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்லும்போது, இச்சிறுவர்கள் அவர்களைப் பார்த்து ஏங்குபவர்களாக விளங்குகின்றனர். வீரா.பாலச்சந்திரனின் 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', வ.ஐ.ச.ஜெயபாலனின் 'எழில்முடி புனைக' முதலிய கவிதைகள் இந்நிலைமைகளை முனைப்புடன் சித்திரிக்கின்றன.

"உங்கள் குழந்தையெல்லாம்
ஓய்யாரமாய் ஓடிப் பள்ளிக்குப் போகையிலே
எம்பிள்ளை
குசினிக் கக்கூசுக் கொல்லைப்புறங்களிலே
வேலைக்காரனென வெதும்பியேமிக
ஏங்குதையோ……………."

(இளங்கதிர், (1981-1982), ப.2)

எனக்கூறுவதன் மூலம், இச்சிறுவர்களின் ஏக்கமும் தவிப்பும் புலப்படுத்தப் பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

**கல்வியின் அவசியம் பற்றி விழிப்புணர்வூட்டல்:**

மலையகச் சிறுவர்களின் கல்விப் பிரச்சினைகளைத் தீர்த்து கல்வியை மேம்படுத்தும் நோக்கிலும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காகவும் என மலையகக் கவிஞர்கள் பல கவிதைகளைப் படைத்துள்ளனர். தர்மூவின் 'மனிதனாக வாழ', 'சமுதாயப் புரட்சி வரும்', 'ஏற்றமளிக்கும் கல்வி', பெனியின் 'ஆதவனே ஒளி வீசு', 'ஒரு லயத்து ராகம்', மை.பன்னீர் செல்வத்தின் 'இலட்சியம்', 'நிஜங்களின் நிதர்சனம்', 'ஆறு ஐந்தாய் மாறும்', 'காலத்தின் கண்ணில் கண்ணீர்', சந்தனம் சத்திய நாதனின் 'அன்பை நாடி', 'கரையைத் தொடாத அலைகள்', 'புறப்படு நீ', புசல்லாவ கணபதியின் 'போதுமடா பழைய பல்லவி', அல்-அஸூமத்தின் 'மலைப்பள்ளி எழுச்சி', பெனியின் 'இன்றைக்கும் ....', ஒரு சமூகத்தின் வரலாறு', 'இருந்தாலும் இறந்தாலும்', பொ. புண்ணிய மூர்த்தியின்

‘கல்வியின் பெயராலே’. மடவளை அன்சாரின் ‘பூக்கள் மலரட்டும்’, றசீனா புகாரின் ‘புதுயுகம் பிறக்க’, ‘தறுதலையாய் ஆக்காதீங்க’, குருவுக்கோர் வாழ்த்து’, சி. சிவசேகரத்தின் ‘குன்றத்துக் கும்மி’, நாகபூஷணியின் ‘அறியாமை’, சக்தி பால ஐயாவின் ‘சுயம் அறிந்து வாழ்வோம் வாரீர்’, பொகவந்தலாவ உனைஸ் ஆரிபின் ‘விழித்தெழுங்கள்’, ம. சண்முகநாதனின் ‘மலையகம் பயனுற வாழ்வதற்கே’, ‘ஐந்து தசம் ஐந்து’, ‘ஆனா ஆவன்னா!’, ‘பழைய கதை’, ‘பெரியசாமி எழுதுகிறேன்’, ‘புதுயுகம்’, ‘தாண்டு தம்பீ – தாண்டு’, ‘விடுதலை’, ‘என்னால் முடியாது’ முதலிய கவிதைகள் இத்தகையவை.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவதைத் தோட்ட நிர்வாகத்தினர் விரும்புவதில்லை. அவர்கள் கல்வி கற்று நல்லதொரு நிலைக்கு வந்துவிட்டால், நிர்வாகத்தினருக்கு அடிமைகளாக இருக்கமாட்டார்கள் என்ற எண்ணமே இதற்கான காரணம். தொடர்ந்தும் பாமரர்களாகவே இருந்தால் நிர்வாகத்தினருக்கு எந்தப் பிரச்சினையும் இம்மக்களால் ஏற்படாது. கல்வி கற்பது ஒருவரது உரிமை. அதற்கு தோட்டப் பிள்ளைகள் தகுதியற்றவர்கள் என நினைப்பது முற்றிலும் தவறான ஒரு சிந்தனையாகும். அதனை மாற்றி அமைக்க வேண்டியது, அச்சமூகத்தினரின் தேவையாக உள்ளது. ‘குன்றத்துக் கும்மி’ எனும் கவிதையில் கவிஞர் பாரதியின் பெண்கள் விடுதலைக் குமியில் கூறுவது போல் கல்வியுரிமைக்குக் குரல் கொடுத்துள்ளமை நோக்கத்தக்கது;

‘.......... பள்ளிப் படிப்பிற்கும் பட்டம் பதவிக்கும்
பிள்ளைகட்குத் தரம் இல்லையென்றார்
கள்ளத்தனங்களைக் கண்டு கொண்டா யெங்கள்
கல்வியுரிமைக்குக் கும்மியடி .......’

(சிவசேகரம், சி., தம்பையா, இ., இராஜேந்திரன், சிவ., பன்னீர்ச் செல்வம், எஸ்., (1993), குன்றத்துக் குமுறல், ப. 23)

உள்ளொன்றும் புறமொன்றுமாக நடித்து இம்மக்களை ஏமாற்றுபவர்களின் நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இவர்கள் உள்ளனர். தமக்கான பாதையை ஒழுங்கமைத்துக் கொள்வதில் இன்னலப்படுகின்றனர். உயர் மட்டங்களை எதிர்த்துப் போராட முடியாதவர்களாகவும், தமக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கையே மேல் எனக் கருதிக்கொண்டு, இலட்சியங்களற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கு அடிப்படைக் காரணம் இவர்களது கல்விப் பின்னடைவே, கல்வி கற்று ஆகப்போவது ஒன்றுமில்லை. தோட்ட வேலையைப் பார்த்தால் போதுமானது என நினைப்பவர்களே இவர்களில் அதிகமானவர்கள். ஆனால் சிலர், கல்வி கற்பதன் மூலமே தமது வாழ்வில் ஒளிகிடைக்கும் எனவும் அதுவே தமது விடிவுக்கான ஒரே வழி எனவும் உணர்ந்துள்ளனர். இது றசீனா புகாரின் ‘புதுயுகம் பிறக்க’ எனும் கவிதையில் பின்வருமாறு சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது;

‘‘......... படித்திடுவோம் புது சாஸ்திரம் கோடி
நாமினி
பயணப்படப் போகும் பாதைக்கு
அதுவே ஒளிவிளக்கு
விடியல்களோடினி என்றும்
வெளிச்சங்களும் சேர்ந்தே வரும் .....
அணி வகுத்து நில்லுங்கள்
அறிவுப் புரட்சி செய்திடவும்
அறியாமை அகன்றோடுமையோ
புரியாமையும் புறப்பட்டே போகும்
புதுயுகம் பிறக்கும் ......’’

(றசீனா, (1999), மண்ணிழந்த வேர்கள், ப. 2)

கல்வியின் மூலம் மலையகம் மறுமலர்ச்சி பெறும்; புதியதொரு யுகம் பிறக்கும் என்ற நம்பிக்கையைக் கவிஞர் மக்களுக்கு ஊட்டுகிறார். மக்கள் தம் நிலையை உணர்ந்து கொள்ளாது இந்த உலகத்தைப் பற்றி அறிய ஆவல் கொள்கின்றனர். தமது சுய அறிவை வளம்படுத்திக் கொள்ளாது, பிறர் கூறுபவற்றை நம்பி, அவையே உண்மையென ஏற்று வாழ்கின்றனர். வாழ்வின் வெற்றி அறிவைப் பெறுவதிலேயே தங்கியுள்ளது. ஒரு மனிதனின் புலன்கள் அனைத்தும் நெறி பிறழாது நின்று, சுதந்திரத்தை

அனுபவிப்பதற்கும் செய்யும் தொழிலை ஆற்றல் மிக்கதாகச் செய்வதற்கும் கல்வி மிக இன்றியமையாதது. மனிதன் செய்கின்ற அநியாயங்கள் அத்தனையும் கடவுளின் செயல் என்று எண்ணி இம்மக்கள் கொடுமைகளுக்கு ஆளானார்கள். அப்போதெல்லாம் இது தமது விதி என விதியை நொந்து கொண்டனர். இந்நிலைமைகள் மாறுவதற்கும் சுயம் அறிந்து வாழ்வதற்கும் கல்வியே துணை செய்கின்றது என்பதை மலையக மக்களுக்கு அறிவுரையாக 'சுயம் அறிந்து வாழ்வோம்' எனும் கவிதை மூலம் சக்தி பால ஐயா விளக்கியுள்ளார்.

மலையக மக்கள் சிறிய ஒரு காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பலரை நம்பி இருக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதற்குப் பிரதான காரணம் கல்வி அறிவின்மையே. இதுவே அவர்களது பெரும் பலவீனமாகும். இதனையே பலரும் சாதகமாகப் பயன்படுத்தி இம்மக்களுக்குக் கொடுமையிழைக்கின்றனர். இவர்களது உயர்வுக்குக் கல்வியே துணை என்பதைப் பலரும் உணர்ந்தாலும் அதனை அடைந்து கொள்வதற்குப் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன. இவர்கள் படித்து விட்டால் தமது தலைமையும் சந்தாப் பணமும் ஆட்டங்கண்டு விடுமோ என்று நினைக்கும் அரசியல் தலைமைத்துவங்களும், வறுமையும், பெற்றோரின் அறியாமையும் மலையக மாணவர்கள் கல்வி பெறுவதற்கு முக்கியமான தடைகளாக உள்ளன.

மலையக மக்கள், அனைவருக்கும் பயந்து, அடங்கி ஒடுங்கி, வாழ வேண்டியவர்களாக உள்ளனர். தாம் அடிமைகள் போல் கூனிக்குறுகி வாழ்கின்றனர். இந்நிலைமை மாற வேண்டுமெனில் கல்வி அவசியம். கல்வி கற்றால் உயர்ந்த வாழ்க்கை வாழ இவர்கள் முயற்சி செய்வர். இனியும் அடிமை வாழ்வை ஆதரிக்க மாட்டார்கள். மலையக மக்கள் விழிப்புணர்வு பெற்று கல்வி மூலம் சிறந்ததொரு நிலைக்கு வந்து, அடிமை வாழ்வை எதிர்ப்பதாகவும், இனியும் பழைய வாழ்வை வாழ முடியாது என்றும் கூறுவதாகவும் ம. சண்முகநாதனின் 'என்னால் முடியாது!' எனும் கவிதை அமைந்துள்ளது;

"இவர்களைக் கண்டதும்
அடங்கி ஒடுங்கி
ஈனப் புழுபோல்
எட்டாய் நெளிந்து
ஆயிரந் தடவைகள்
'ஆமாங்க' சொல்லி
'ஐயா சொல்றது சரி'
எனச் சொல்லி,
இனம்புரியாத பய உணர்வோடு
இதயந் துடித்து
வார்த்தைகள் குழற
வேதனையோடு
வியர்த்து வடிய
உயிருள்ள பிணமாய்
என்னால் முடியாது!
துரை என்றாலும்
தலைவரென்றாலும்
தலையைச் சொறிந்து
தாழ முடியாது!
எத்தனை முறையும்
சத்தியம் செய்வேன்
அறிவின் வளத்தால்
உழைப்பின் பலத்தால்
உயர்வு என்பது
எனது கைகளில்
என்ப தொன்றே
உண்மை! உண்மை!
ஐயா! இனிமேல்
உங்களைக் கண்டதும்
ஈனப் புழுபோல் .....
என்னால் முடியாது"

(சண்முகநாதன், ம., (1995), வாழ வா தோழா, ப. 50)

எனக் கூறுவதினூடாக, தொடர்ந்தும் தம்மால் அடிமைகளாக வாழ முடியாது என்ற மனநிலையும், தமது இவ்வாறான இரங்கத்தக்க நிலைக்கு அடிப்படைக் காரணமே தமது அறியாமைதான் என்பதும், எதிர்காலம் எமது கைகளில் தான் என்ற நம்பிக்கையும் புலப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் இவரது பல கவிதைகளிலும் கல்வியினூடான சிறந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக் குரல்கள் ஒலிக்கின்றன.

மலையக மக்களிடம் தாழ்வு மனப்பான்மையும், பய உணர்வும் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது. ஆரம்ப காலகட்டங்களில் இந்தியாவிலும் இவர்கள் பண்ணைகளில் அடிமைகளாக வேலை செய்துள்ளனர். இங்கும் கடின உழைப்பைச் செய்து, கொடுத்ததைக் கூலியாக வாங்கிக் கொள்ளும் கொத்தடிமைச் சமூகமாகவே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துள்ளனர். இவர்களது உள்ளங்களில் இருந்து அடிமை மனநிலை அகற்றப்படுவதற்கான ஒரே ஆயுதம் கல்வியே என்பதை பெனி 'ஒரு சமூகத்தின் வரலாறு' எனும் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமன்றி, மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகள் மாறி, எழுச்சி பெறுவதற்கும் கல்வி மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. மேலும், எதிர்கால

சந்ததிகளாவது நிம்மதியாக வாழ்வதற்கு மலையகம் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதையும் பல கவிஞர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

கல்வியில் மாணவர்கள் முன்னேறுவதற்குப் பெற்றோரின் ஒத்துழைப்போடு ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் மிக இன்றியமையாதது. மலையக மாணவர்களின் நிலைமைகளை உணர்ந்து தியாக மனப்பான்மையுடன் ஆசிரியர்களும் தமது கற்பித்தலைச் செய்து, மாணவர்களுக்குக் கல்வியின் மீதான ஆர்வத்தை ஊட்ட வேண்டும். மாணவப் பருவத்தில் பிள்ளைகள் கல்வியின் மீது தூண்டப்படுதல் மிகவும் அவசியம். பெற்றோர் பிள்ளைகளை கல்வி கற்பதற்கு ஊக்கப்படுத்தாவிட்டாலும் ஆசிரியர்கள் அவர்களது கடமைகளைச் சரிவரச் செய்தால், நிச்சயமாக எதிர்காலத்தில் கல்வி மூலம் மலையகத்தில் ஒரு சமுதாயப் புரட்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. பூண்டுலோயா தர்முவின் 'சமுதாயப் புரட்சி வரும்' எனும் கவிதையிலும் றசீனாவின் 'நல்லதைச் செய்யுங்க டீச்சர்', 'குருவுக்கோர் வாழ்த்து' முதலிய கவிதைகளிலும் இவ்வாறான விடயங்களைக் காணலாம்.

மலையகத்தில் பல துறைகளையும் சார்ந்த கல்விமான்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். கல்வி கற்று அனைத்துத் துறைகளிலும் மக்கள் கால் பதிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும் என்பதை ம. சண்முக நாதனின் 'ஐந்து தசம் ஐந்து' எனும் கவிதை சித்திரிக்கின்றது. அதேவேளை மாணவர்கள் சில பாடங்களை ஆர்வத்துடன் படிக்கின்றனர். சில பாடங்களைக் கற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வாறான நிலைமைகள் மாற வேண்டும். கஷ்டம் என்பது நிரந்தரமானதல்ல. அவை தற்காலிகமானவை, அதனால் கஷ்டப்பட்டு முயன்றால் மனிதனால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை ம. சண்முகநாதனின் 'தாண்டு தம்பீ – தாண்டு' எனும் கவிதை பின்வருமாறு தெளிவுறுத்துகின்றது;

'மலையகம் ஏறும்
கலைகளிலே நீ
விளைந்தவன் தானேடா
தம்பீ – அட
இல்லை என்று
எத்தனை நாள்தான்
சொல்லி அழுவாய் எழடா
திறமை என்பதும்
பெருமை என்பதும்
ஒருவரின் உடைமை இல்லைஏய்
விழுந்து கிடந்தவன்
எழுந்து நடந்தால்
விழிகள் விரிவது காண்பாய்
சிலிர்ந்து எழுவதில்
இருக்கும் இன்பம்
சோம்பிக் கிடப்பதில் இல்லை
தடைகள் என்பது
தாண்டத் தானே
தாண்டு தம்பீ தாண்டு
கணிதப் பாடம்
கஷ்டமென்றாலும்
கைவிட முடியாது தம்பீ
கல்வியின் உயர்வால்
கிடைக்கும் களிப்பு
காசால் கிடைப்பது இல்லை!
கைகளை வீசி
கால்களால் உதைத்தால்
கரையில் இருப்பாய் நீந்து!'

(சண்முகநாதன், ம., (1995), வாழ வா தோழா, ப. 29)

இக்கவிதையில் மாணவர்கள் எல்லாத் தடைகளையும் தாண்டி, முன்னேறுவதற்குத் தூண்டப்படுகின்றார்கள். உறங்கிக் கிடக்கும் மக்கள், தட்டி எழுப்பப்படுகின்றனர். மக்களுக்குள் ஆழப்புதைந்து கிடக்கும் திறமைகளை எடுத்துக் காட்டி, நம்பிக்கை ஊட்டப்பட்டுள்ளது.

மேலும், மலையகத்தில் கற்று முன்னேறியவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் முழுமையாக மலையகத்தை விட்டும் நீங்கி வாழாது, தாம் பிறந்து, வளர்ந்த சமூகத்தைச் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். தம் இனம், தம் மக்கள் என்ற உணர்வோடு அவர்களது அறியாமையைப் போக்குவதற்கு முன்வர வேண்டும். தமது சுகபோகங்களைச் சற்றுத் தள்ளி வைத்து விட்டு, சமூகத்திற்காகச் சற்று உழைத்தால் நிச்சயமாக, சமூகத்தின் சீர்கெட்ட நிலைமை மாறி, துன்பங்கள் நீங்கி விடும். இதனைத் தர்முவின் 'சமுதாயப் புரட்சி வரும்' எனும் கவிதை துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது;

'....... பட்டப் படிப்போடு
பதவி பெற்ற நம்மவர்கள்
சற்றே தமது சுகம் தள்ளிவைத்து
சத்தியமாய் அக்கறையாய்
கற்றுத்தரும் கடமை பெற்றால்
கல்லாமை அறியாமை எல்லாம்
திட்டமாய் நீங்கி விடும்
சீர்கெட்ட நிலை மாறும் ....'

(தர்மு, (2000), மலையரசி, ப. 58)

தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றமை, இலவசக் கல்வி, இலவசப் பாடநூல், இலவச சீருடை, இலவச மதிய உணவு வழங்கள்,போசாக்குணவு வழங்கும் திட்டம், முதலிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலையகக்கல்வியில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை சீடா முதலிய நிருவனங்களின் உதவியோடு மலையகப் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும், மேற்கொள்ளப்பட்டுக் கொண்டும் வருகின்றன.

இவ்வாறான காரணங்களால் பல்கலைக் கழகங்களிலும் மலையக மாணவர்களின் நுழைவு வீதமும் ஓரளவு அதிகரித்து வருவதை அவதானிக்க முடியும். ஏனைய பீடங்களை விட கலைப்பீடத்திற்கு மாணவர்களின் நுழைவே அதிகமாகும். பலர், பத்தனைக் கல்விக் கல்லூரிக்கும் ஏனைய கல்விக் கல்லூரிகளுக்கும் சென்று ஆசிரியர்களாக வெளியேறியுள்ளனர். இது, அம்மாணவர்களின் மத்தியில் கல்வியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வையே காட்டுகின்றது. அதேவேளை மலையகச் சிறுவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளார்கள். இன்னும் கல்வியின் வாசமே படாத மாணவர்களும் கல்வியில் இருந்து இடைவிலகும் மாணவர்களும், ஐந்தாம் ஆண்டுவரை தோட்டப் பாடசாலைக் கல்வியோடு கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் மாணவர்களும் மலையகத்தில் காணப்படுகின்றனர். அதனால் மலையக மக்களின் கல்விப் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்ந்து விட்டதாகக் கூறமுடியாது.

**அடிக்குறிப்புகள்**

01. சந்திரசேகரன், சோ., (1999), மலையகக் கல்வி சில சிந்தனைகள், பக். 18 – 19.
02. சந்திர சேகரன், சோ., (1999), மு.கு. நூலில் மலையகக் கல்வியின் ஆரம்பம், அதன் வரலாறு முதலியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.
03. மூக்கையா, மா. செ., (1995), இன்றைய மலையகம், ப. 137, 139.
04. துரை விஸ்வநாதன் (தொகுப்பாசிரியர், (1997), உழைக்கப் பிறந்தவர்கள், ப. 114–126
05. Balasooriya,Tissa, (1978), ‘Education of Estate Population of Indian Origin’ logos,17 (7)
    Gnanamuthu G.A, (1977), Education and the Indian plantation workers in Sri Lanka
    முதலிய நூல்களில் இவை பற்றி ஆராயப்பட்டுள்ளன.
06. தினகரன், (21-05-2006), ‘இருபதாம் நூற்றாண்டில் இப்படியுமொரு தமிழ்ப்பாடசாலை’, ப. 8.
    தினக்குரல், (12-11-2006), ‘இப்படியும் ஒரு பாடசாலை: பாடசாலைக் கட்டிடத்திற்கு உள்ளேயே குடைபிடித்துக் கொண்டு கற்கும் நிலை’ ப. 4.
    முதலிய தலைப்புக்களில் அமைந்த கட்டுரைகள் இதனை உறுதிசெய்கின்றன.
07. மூக்கையா, மா.செ., (1995), மு.கு.நூ, பக். 131 – 143.